நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகள்

ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்
தெரிந்து கொள்ளுங்கள். பேசுங்கள். அதன்படி வாழுங்கள்.

மேக்னா இன்டர்நேஷனல்



CEO விடமிருந்து செய்தி

நமது நடத்தை நெறிகள் மற்றும் அறநெறி-களை வாசித்துப் புரிந்து கொள்ளவேண்டிய கடமை நாம் எல்லாருக்கும் உண்டு. அப்போ-துதான் நாம் நம் தொழில்சார்ந்த நடவடிக்கை-களில் நேர்மையோடும் ஒருமைப்பாட்டுடனும் செயல்பட இயலும்.

இந்தச் சிறந்த நிறுவனத்தின் CEO என்ற முறையில், நாம் சாதித்துள்ள வெற்றிகளை, நாம் உண்டாக்கியுள்ள நன்மதிப்பை, நாம் ஏற்படுத்தியுள்ள நம்பகத்தன்மையை எண்ணி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். நம்முடைய இந்தச் சாதனைகளைப் பாதுகாப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பங்களிப்பை வழங்கவேண்டும். அதற்கு நாம் எல்லாரும் நம் நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகளைப் பின்பற்றுவதை உறுதி செய்யவேண்டும்.

உலகெங்கிலும் உள்ள அரசு நிறுவனங்கள், சட்ட நிறுவனங்கள் தங்கள் நெறிமுறைகளை ஒழுங்காக பின்பற்றுகின்றனவா என்பதை இன்னும் உன்னிப்பாக கவனிக்கத்தொடங்கி உள்ளன, குறிப்பாக தானியங்கித் தொழி-ல்துறையில் அவர்களுடைய கவனம் வெகுவாகத் திரும்பியுள்ளது, இதுபற்றி பல விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. மேக்னாவும் இதுபோன்ற விசாரணைகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

தவறான நடத்தையை மேக்னா ஒருபோதும் சகித்துக்கொள்ளாது. அதேபோல் நன்னம்பிக்கை அடிப்படையில் யாராவது ஒரு ஊழியர், ஒரு பிரச்சனை பற்றி புகார் தெரிவிக்கிறார் என்றால் அவருக்கு எதிராக யாரேனும் செயல்பட்டால் அதையும் மேக்னா பொறுத்துக்கொள்ளாது.

ஊழியர்கள் என்ற முறையில், நமது ஒழுக்க மற்றும் நடத்தை விதிகளை வாசித்துப் புரிந்து கொள்ளவேண்டிய கடமை நாம் எல்லாருக்கும் உண்டு. அப்போதுதான் நாம் நம் தொழில்சார்ந்த நடவடிக்கைகளில் நேர்மையோடும் ஒருமைப்பாட்டுடனும் செயல்பட இயலும்.

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பங்களிப்பை செய்வதற்கான நேரம் இது - ஒருமைப்பாட்டுடன் நடத்தல், பிறர் ஒருமைப்பாட்டுடன் நடக்காவிட்டால் அதைப்பற்றிப் உரக்கப் பேசுதல் மேக்னாவில் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி அதன் தொடர்ச்சியான வெற்றிக்கு நீங்கள் பாடுபடுவதற்கு நன்றி.

அன்புடன்,

டொனால்ட் ஜே வாக்கர்
தலைமைச் செயல் அலுவலர்

உள்ளடக்கம்

CEOவிடமிருந்து செய்தி
நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகள் - ஓர் அறிமுகம் 2
இது ஏன் ஊழியர்களுக்கு முக்கியமானது 5

தொழில் நடவடிக்கைகளில் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

தொழிலை ஒருமைப்பாடு, நியாயம் மற்றும் மரியாதையுடன் நடத்துதல் 7
ஏகபோக தடை மற்றும் போட்டிச் சட்டங்களுக்கு இணங்குதல் 7
லஞ்சத்துக்கு எதிரான சட்டங்களுக்கு இணங்குதல் 8
பரப்புரை செய்தல் / அரசியல் பங்கேற்பு 9

வெளிப்படையான அறிக்கை சமர்ப்பித்தல் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

நிதி அறிக்கை பதிவு செய்தல் 12
முறையற்ற பங்கு பத்திர வணிகம் 13
பொது வெளிப்பாடுகள் 13

நமது பணியிடத்தில் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

சுற்றுச்சூழல் மற்றும் பணிசார்ந்தப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் 15
தனிப்பட்ட விவரங்களைப் பாதுகாத்தல் 15
மனித உரிமைகளை மதித்தல் 16
பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்குதல் 16

நமது செயல்பாடுகளின் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

ரகசியமான விவரங்களைப் பயன்படுத்துதல் 19
முதலீடுகள் மற்றும் நிறுவன வாய்ப்புகள் 19
தன்னைக் கையாளுதல் மற்றும் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் பழகுதல் 20
வெளிப்பதவிகள் 21
பரிசுகள், உணவுகள் மற்றும் பொழுதுப்போக்கு 21

நல்ல தகவல் தொடர்பின் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

கவனமான தகவல் தொடர்பு 23
தி குட் பிசினஸ் லைன் 24

சட்டபூர்வமான இணங்கல் நிபுணர்களின் ஆதரவு 25
அருஞ்சொற்பொருள் 26
வண்ணத்திலும் சாய்ந்த எழுத்துகளிலும் தோன்றும் சொற்கள் அருஞ்சொற்பட்டியலில் வரையறுக்கப்பட்டுள்ளன

அறிமுகம்

நாம் ஒவ்வொருவரும் நமது பணிகளை நன்னடத்தையோடும் நமது நிறுவனங்களின் கொள்கைகளோடு பொருந்தும்படியும் நடத்தவேண்டும். இந்தக் கடமை நாம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை நாம் எல்லாரும் புரிந்துகொள்ளவேண்டியது முக்கியம்.

இன்றைக்கு தானியங்கித் தொழில்துறை மேலும் சிக்கலாகவும் சவாலாகவும் மாறிக்கொ-ண்டுவருகிறது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் நமது பணிகளை நன்னடத்தையோடும் நமது நிறுவனங்களின் கொள்கைகளோடு பொருந்தும்படியும் நடத்தவேண்டும். இந்தக் கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை நாம் எல்லாரும் புரிந்துகொள்ளவேண்டியது முக்கியம்.

மேக்னாவின் நியாயமான தொழில் நிறுவன கலாசாரத்தில் மதிப்பீடுகள் மற்றும் தொழில் கொள்கைகள் நமது ஊழியர் பட்டயம், பணிசார்ந்த கொள்கைகளில் விவரிக்கப்பட்டுள்ளது, அவை நமது ஒழுக்கம் மற்றும் நடத்தை விதிகளின்மூலம் வலியுறுத்தப்படுகின்றன. நாம் நன்னடத்தையோடு தொடர்ந்து செயல்பட உதவும் ஒரு கையேடாக இந்த நெறிமுறை செய-ல்படுகின்றது.

மேக்னா தனது ஊழியர்கள் ஒவ்வொருவரும் பொருந்துகின்ற சட்டங்களுக்கு இணங்கி நமது முக்கிய மதிப்பீடுகள் மற்றும் தொழில் கொள்கைகளுக்குப் பொருந்தும் படி நடந்து-கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறது, அதனை வலியுறுத்துகிறது. நமது வழங்குநர்கள், ஆலோசகர்கள், தனி ஒப்பந்ததாரர்கள், முகவர்கள் மற்றும் பிற பிரதிநிதிகளும் இந்தத் தர ஒழுங்குகளைப் பின்பற்ற வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். நமது ஊழியர்கள் இந்த நெறிமுறைகளை மீறினால், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம், இதனால் அவர்கள் பணிநீக்கம் செய்யப்படவும் நேரலாம். ஒருவேளை மூன்றாம் நபர்கள் இந்த நெறி-முறைகளை மீறினால், அவர்களுடனான நமது உறவு முறிந்து போகலாம்.

இந்தத் தரநிலை பின்வருவனவற்றிற்குப் பொருந்தும்:

- பணியிடத்தில் நாம் மற்றவர்களை எப்படி நடத்துகிறோம்;
- நமது சுற்றுச்சூழல் சார்ந்தப் பொறுப்புகளை எப்படிக் கையாளுகிறோம்;
- போட்டியாளர்களுடன் எப்படி ஊடாடுகிறோம்;
- அரசாங்க அதிகாரிகளுடன் எப்படி உரையாடுகிறோம்;
- மேக்னாவின், நமது வாடிக்கையாளர்களின் ரகசியமான விவரங்களை எப்படிப் பாதுகா-க்கிறோம்.

நேர்மையுடனும் ஒருமைப்பாட்டுடனும் நடத்தல், எப்போதும் சரியான நடத்தையைத் தேர்ந்தெடுத்தல் ஆகிய பொறுப்புகள் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அது நமது பணியின் ஒரு முக்கியப் பகுதி. இந்த விஷயத்தில் நாம் வெற்றி பெறுவதற்கு தேவையான பயிற்சியை-யும் தொடர்ச்சியான ஆதரவையும் வழங்குவதற்கு மேக்னாவின் இணக்கக் குழு உறுதிபூ-ண்டுள்ளது.

மேக்னா ஊழியர்கள் என்ற முறையில் நாம் நமது கடமைகளைச் செய்யும்போது நமக்கு வழிகாட்டுவதற்காக இந்த ஆவணம் வழங்கப்படுகிறது, உள்ளூர் மற்றும் சர்வதேச சட்டங்க-ளுக்கு நாம் இணங்கி நடப்பதை உறுதி செய்வதற்கான தலைப்புகளை இது விவரிக்கிறது.

இந்த ஒழுக்க மற்றும் நடத்தை நெறிகள் எனக்குப் பொருந்துமா?

ஆம். இந்த நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகள் மேக்னா இண்டர்நேஷனல் இன்க்'இன் அனைத்து ஊழியர்களுக்கும் அதன் அனைத்து செயல்பாட்டு குழுக்கள், பிரிவுகள், இணை முயற்சிகள் மற்றும் சர்வதேச அளவிலான பிற செயல்பா-ட்டுக் குழுக்களுக்கும் பொருந்தும். இது நமது இயக்குநர்கள் அனைவருக்கும், அலுவர்கள் அனைவருக்கும் பொருந்தும், மேக்னாவின் சார்பாக செயல்படுகிற ஆலோசகர்கள், தனி ஒப்பந்ததாரர்கள், முகவர்கள் மற்றும் பிற பிரதிநிதிகளுக்கும் பொருந்தும்.

நாம் இந்த நெறிமுறைகளைப் பின்பற்றவில்லை என்றால் என்ன ஆகும்?

ஒழுக்க மற்றும் நடத்தை நெறிமுறைகளின் மதிப்பீடுகளைப் பின்பற்றுவது மேக்னாவுக்கு மிகவும் முக்கியம். இதனை உறுதியாகப் பின்பற்ற வேண்டும் என்று நாம் விரும்புகிறோம், யாரேனும் இதனைப் பின்பற்றாவிட்டால் அது தீவிரமான குற்றமாகப் பார்க்கப்படும். இந்த நெறிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க-ப்படும். ஒழுங்கு நடவடிக்கையின் வகை குற்றத்தின் தீவிரத்தன்மையைப் பொறுத்து அமையும், குற்றம் மிகத்தீவிரமாக இருந்தால் சம்பந்தப்பட்ட நபர் அந்தக் காரணத்துக்காக பணிநீக்கம் செய்யப்படவும் நேரலாம்.

நமது ஊழியர்கள் பின்பற்றவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிற அதே நடத்தை விதிகளின் தரங்களை, நமது வழங்கு-நர்கள், ஆலோசகர்கள், தனி ஒப்பந்ததாரர்கள், முகவர்கள் அல்லது பிற பிரதிநிதிகளும் பின்பற்றவேண்டும். ஒருவேளை அவர்கள் பின்பற்றாவிட்டால் அவர்களுக்கும் இதேபோன்ற விளைவுகள் ஏற்படலாம். மூன்றாம் நபர் ஒருவர் செய்த குற்றம் மிகத்தீவிரமாக இருந்தால், நாம் அவருடனான உறவை முறித்துக்கொள்ளக்கூடும்.

நீங்கள் கவனத்தில் வைக்கவேண்டிய இன்னொரு விஷயம், இந்த நெறிமுறைகளின் சில பகுதிகள் பொருந்துகிற சட்ட-த்தேவைகளையே பிரதிபலிக்கின்றன. இதன் பொருள் இந்த நெறிமுறைகளை மீறி நீங்கள் நடந்தால் அது சட்ட மீறலா-கவும் ஆகலாம். இதுபோன்ற சூழ்நிலைகளில் தண்டனையாக அபராதம் விதிக்கப்படலாம், அதில் சம்பந்தப்பட்ட நபர் சிறைக்குச் செல்ல நேரலாம்.



தயவுசெய்து கவனிக்கவும் : இந்த ஆவணம்முழுதும் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் மற்றும் உதாரணங்கள் அந்தந்த விஷயத்தைப் புரியவைப்பதற்காகமட்டுமே தரப்பட்டுள்ளன. அவை நிஜமான நிகழ்வுகளை விவரி-க்கவில்லை, ஒழுக்கம் மற்றும் நடத்தை நெறிமுறைகளின்கீழ் எழக்கூடிய அனைத்து அல்லது மிகத்தீவிரமான சூழ்நிலைகளைக்கூட விவரிப்பது இவற்றின் நோக்கம் அல்ல.

Driving Integrity

Know it. Speak it. Live it.

இது ஏன் ஊழியர்களுக்கு முக்கியம்

நாம் தேர்ந்தெடுக்கும் விஷயங்கள்தான் ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றன

வாழ்க்கையில் நாம் பல விஷயங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது, தினந்தோறும் கண்சிமிட்டும் நேரத்திற்குள் நாம் இவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொண்டே இருக்கிறோம்.

ஆனால் இப்படி நாம் தேர்ந்தெடுக்கின்ற சில விஷயங்கள் மற்றவற்றை விட முக்கியமானவை. மேக்னாவின் ஒரு பிரதிநிதியாகச் செயல்படுகிற நாம், எதைத்தேர்ந்தெடுக்கிறோம் என்பது நம் நிறுவனத்தையும் நம்மையும் மற்றவர்கள் எப்படிப்பார்க்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்கும் ஒன்றாக உள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், நாம் எதைத்தேர்ந்தெடுக்கிறோம் என்பதுதான் ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதாக உள்ளது.

பணியிடத்தில் நாம் சிறந்த விஷயங்களைத் தேர்ந்தெடுக்க உதவுவதற்காக மேக்னா, நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகளை உண்டாக்கியுள்ளது. இந்த நெறிமுறைகள் உலகெங்கிலும் உள்ள அனைத்து மேக்னா ஊழியர்களுக்கும் பொருந்தும், மேக்னாவின் நிறுவன/ குழு அலுவலகங்கள், உற்பத்திப் பிரிவுகள் மற்றும் இணை முயற்சிகளுக்கும் இவை பொருந்தும்.

மேக்னா தனது ஊழியர்கள் அனைவரும் நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகளை வாசிக்க வேண்டும், புரிந்துகொள்ளவேண்டும் மற்றும் நன்னடத்தையான, நேர்மையான வழிகளில் நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறது. சரியான விஷயங்களைத் தேர்ந்தெடுப்பது, நமது தொழிலைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாடுகள் மற்றும் சட்டங்களைப் பின்பற்றுவது ஆகியவை நமது இப்போதைய மற்றும் வருங்கால வெற்றிக்கு மிகவும் முக்கியம்.

நீங்கள் என்ன செய்யலாம்

நமது நிறுவனம் முழுவதும் ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதற்கு நீங்கள் உதவுவீர்கள் என்று மேக்னா நம்புகிறது. நாங்கள் உங்களிடம் கோருவது

- நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகளையும் தொடர்புடைய கொள்கைகளையும் தெரிந்துகொள்ளுங்கள்
- நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகளை யாரேனும் மீறியிருக்கலாம் என்று நீங்கள் நினைத்தால், அல்லது இந்த நெறிமுறைகள் பற்றி ஏதாவது கேள்விகள் இருந்தால் அதை உரக்கச் சொல்லுங்கள்
- நமது நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகளை உண்டாக்கும் அடிப்படைக் கொள்கைகளை ஒவ்வொரு நாளும் பின்பற்றுங்கள்

இதைச் சொல்லும் நமது வாசகம்: **தெரிந்து கொள்ளுங்கள். பேசுங்கள். அதன்படி வாழுங்கள்.** நாம் அனைவரும் நன்னடத்தையான நெறிமுறைகளின் படி தொழில் நடத்துவதில் நமது ஊழியர்கள் எல்லாரும் பங்கேற்கவேண்டும், மேக்னாவின் வெற்றி இதைச்சார்ந்தே அமையும்.

நிர்வாகிகள் / மூத்த அதிகாரிகள் / மேலாளர்கள் ஆகியோரிடம் எதிர்பார்க்கப்படுபவை.

நிறுவனத்தின் தலைவர்கள் என்ற முறையில் மேக்னாவின் நிர்வாகிகள், மூத்த அலுவலர்கள் மற்றும் மேலாளர்கள் மிகச்சிறந்த நன்னடத்தையோடு நடந்து கொள்ள வேண்டும், அவர்களுடைய குழுக்கள் அவர்களைப் பின்பற்றுகிற முன்னுதாரணங்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேக்னாவின் தலைவர்கள் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இந்த நெறிமுறைகள் மீறப்படுகின்றனவோ என்று அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால், அதனை சரியான நேரத்தில் புகார் செய்வது அவசியம். இந்த நெறிகளுக்கு நாம் இணங்குவது பற்றி ஊழியர்களுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் அதை அவர்கள் சுதந்தரமாக வெளிப்படுத்தி பேசவேண்டும், அதற்கு ஏற்ற சூழலை தலைமை ஏற்படுத்தி பராமரிக்க வேண்டும். இந்த நெறிமுறைகளில் விவரிக்கப்பட்டுள்ள விஷயங்கள், நிறுவனத்தில் எங்கும் பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய தலைவர்கள் முன்னுதாரணங்களாகச் செயல்படுவது முக்கியம்.

தொழில் நடவடிக்கைகளில் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

தொழிலை ஒருமைப்பாடு, நியாயம் மற்றும் மரியாதையுடன் நடத்துதல் 7

ஏகபோக தடை மற்றும் போட்டிச் சட்டங்களுக்கு இணங்குதல் 7

லஞ்சத்துக்கு எதிரான சட்டங்களுக்கு இணங்குதல் 8

பரப்புரை செய்தல் மற்றும் அரசியல் பங்கேற்பு 9

தொழிலை ஒருமைப்பாடு, நியாயம் மற்றும் மரியாதையுடன் நடத்துதல்

ஊழியர்கள், மேலாளர்கள் என நாம் அனைவரும் மேக்னாவின் வெற்றியை உறுதிசெய்யும் பொறுப்பைப் பகிர்ந்துகொ-ள்கிறோம் என்பதே நமது செயல்பாட்டுத் தத்துவமாகும்.

இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் எல்லாரும் ஒருமைப்பாட்டுடன் செயல்படவேண்டும். நமக்குப் பொரு-ந்துகிற சட்டங்களை நாம் எழுத்துபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் பின்பற்றவேண்டும், இந்த நெறிமுறைகளின் படி நடக்கவேண்டும், நாம் கொடுத்த வாக்குகளைக் காப்பாற்றவேண்டும் என்பதே இதன் அர்த்தம்.

பிற ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள் அல்லது பிற பங்குதாரர்களுடன் பழகும் போதும் நாம் நியாயமாக நடந்துகொள்ளவேண்டும்.

நாம் பழகுகிற சிலருக்கு வேறுபட்ட எண்ணங்கள் கருத்துகள் இருக்கலாம், அதை நாம் மதிப்பது அவசியம், நாம் எந்தெந்த நாடுகளில் இயங்குகிறோமோ அந்த நாடுகளின் கலாச்சாரங்கள் மற்றும் பழக்கவழக்கங்களைப் புரிந்து கொண்டு, நுண்ணுணர்வுடனும் அக்கறையுடனும் செயல்படவேண்டும், நாம் எங்கெல்லாம் தொழில் செய்கிறோமோ அந்தச் சமூக மற்றும் சுற்றுச்சூழல்களில் நாம் ஏற்படுத்தும் தாக்கத்தை கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஏகபோக தடை மற்றும் போட்டி சட்டங்களுக்கு இணங்குதல்

நாம் பிற நிறுவனங்களுடன் தீவிரமாக, ஆனால் சுதந்தரமான மற்றும் நியாயமான போட்டிச்சூழலை மதித்து போட்டியி-டுகிறோம். ஆகவே மேக்னா ஊழியர்கள் எல்லாரும் பொருந்துகிற அனைத்து ஏகபோக தடை மற்றும் போட்டி சட்ட-ங்களுக்கும் இணங்குவோம் என்று உறுதிபூண்டுள்ளனர். இந்தச் சட்டங்களை மீறும் எந்த நடவடிக்கைகளிலும் நாம் ஈடுபடமாட்டோம். உதாரணமாக நமது போட்டியாளர்களுடன் சேர்ந்து விலைகளைத் தீர்மானித்தல், தள்ளுபடி அல்லது விற்பனை நிபந்தனைகளைத் தீர்மானித்தல், உற்பத்தியைக் கட்டுப்படுத்துதல், சந்தைகளைப் பிரித்தல், ஏல நடவடி-க்கைகளை ஒருங்கிணைத்தல், அல்லது வாடிக்கையாளர்கள் அல்லது வழங்குநர்களைப் புறக்கணித்தல் போன்றவை.

ஏகபோகத் தடை மற்றும் போட்டி தொடர்பான நமது கொள்கை இந்த உறுதிப்பாட்டை நாம் எப்படி வழங்குகிறோம் என்பது பற்றிய விரிவான விளக்கத்தை வழங்குகிறது.

Driving Integrity
Know it. Speak it. Live it.

கேள்வி: நான் ஆட்டோ ஷங்காய் நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன் அப்போது என்னுடன் கலந்துகொண்ட முன்னாள் சக விற்பனைப் பணியாளர் ஒருவரை நான் சந்தித்தேன், அவர் இப்போது ஒரு போட்டி நிறுவன-த்தில் பணி புரிந்துகொண்டிருக்கிறார். நாங்கள் இருவரும் இணைந்து மதிய உணவு சாப்பிட்டோம். சந்தையில் புதிதாக பொருட்களை வாங்கிக்கொண்டிருக்கிற ஒருவரைச் சமாளிப்பதற்காக நாம் இருவரும் ஒரு வியூகத்தை அமைக்கலாமா என்று அவர் கேட்டார். நான் யோசித்துச் சொல்கிறேன் என்று அவரிடம் சொன்னேன். நான் என்ன செய்திருக்க வேண்டும்?

பதில்: உங்களுடன் முன்பு பணியாற்றிய ஒருவருடன் சேர்ந்து மதிய உணவு சாப்பிடுவதில் எந்தப் பிரச்னையும் இல்லை, அதேசமயம் போட்டியா-ளர் ஒருவருடன் சேர்ந்து வியூகத்தை ஒருங்கிணைப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஒரு சூழலில் நீங்கள் வியூக ஒருங்கிணைப்பு பற்றிய பேச்சை உடனே நிறுத்த வேண்டும், உங்களு-டன் சாப்பிட வந்திருப்பவரிடம் இதுபற்றி நான் பேச விரும்பவில்லை என்று சொல்ல வேண்டும். அதன்பிறகு நீங்கள் உங்களுடைய மேலாளர் அல்லது சட்ட இணக்க நிபுணருக்கு உடனே இதுபற்றித் தெரிவிக்கவே-ண்டும்.

லஞ்சத்துக்கு எதிரான சட்டங்களுக்கு இணங்குதல்

நாம் நேரடியாகவோ மூன்றாம் நபர்கள் மூலமாகவோ, லஞ்சங்கள் , அல்லது கையூட்டுகள் போன்றவற்றை வழங்குவ-துமில்லை, பெற்றுக்கொள்வதுமில்லை. மதிப்பு மிக்க பொருட்களைக் கொடுக்கும்போதோ பொற்றுக்கொள்ளும்போதோ இதன்மூலம் ஒரு தொழில்தீர்மானம் பாதிக்கப்படக்கூடுமா அல்லது பிறர் அப்படி நினைக்க வாய்ப்பு ஏற்படுமா என்று நாம் சிந்திக்கவேண்டும். நாம் எப்போது யாருக்குப் பணம் செலுத்தினாலும் அதற்கான பதிவுகள் துல்லியமாகவும் முழு-மையாகவும் இருப்பதை உறுதிசெய்யவேண்டும். இந்தக் கடமைகள் எல்லாச் சூழ்நிலைகளிலும் பொருந்தும், ஆனால் குறிப்பாக அரசு அலுவலர்களோடு தொடர்புடைய விஷயங்களில் இவை மிகவும் கண்டிப்பாகப் பின்பற்றப்படவே-ண்டும்.

லஞ்சத்திற்கு எதிரான நமது உறுதி எந்த விதிவிலக்குகளும் இல்லாமல் நமது எல்லாச்செயல்பாடுகளுக்கும் பொருந்தும், உள்ளூர்ச் சட்டங்கள், கலாசாரப் பழக்க வழக்கங்கள் எப்படி இருந்தாலும் சரி. நமது சார்பாகச் செயல்படும் மூன்றாம் நபர்களும் இந்தக் கொள்கையைப் பின்பற்றவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

லஞ்சம் கொடுக்காமல் தொழில் நடத்துவது பற்றிய நமது உறுதிப்பாட்டை மேலும் தெரிந்துகொள்வதற்கு நமது லஞ்சம் & முறையற்ற பணம் செலுத்துதல் தொடர்பான கொள்கையைக் காணவும்.

கேள்வி: என்னுடைய நாட்டில், வேலை விரைவாக நடப்பதற்காக அரசு ஊழியர்களுக்கு ஒரு சிறிய தொகையை ($100க்கும் குறைவான தொகையை) தருவது வழக்கம். நமது நெறிமுறைகள் மற்றும் கொள்கைகளின் கீழ் இப்படி பணம் செலுத்துவதற்கு அனுமதி உண்டா?

பதில்: இல்லை. நமது நெறிமுறைகள் மற்றும் லஞ்சம் & முறையற்ற பணம் செலுத்துதல் தொடர்பான கொள்கையின் படி இதுபோன்று பணம் செலுத்துதலுக்கு அனுமதி கிடையாது. நீங்கள் விவரிக்கும் சூழ்நிலையில் செலுத்தப்படுகிற பணம் பொதுவாக "வேலைநடப்பதற்காக செலுத்தும் பணம்" அல்லது "வேலை இலகுவாக்குவதற்காக தரும் பணம்" என்று குறிப்பிடப்படுகிறது. சில நாடுகளில் இப்படிப் பணம் தருவது சட்டபூர்வமாகச் செல்லுபடியாக-லாம், பொதுவழக்கமாக இருக்கலாம், ஆனால் வேறு பல நாடுகளில் அவை சட்டப்படி செல்லாது.

கேள்வி: பாதுகாப்புச் சட்டங்களுக்கு நாம் இணங்கிச் செயல்படுகிறோமா என்பதைக் கவனிக்கும் ஓர் அரசாங்க அலுவலர் தன்னுடைய உறவுக்காரருடைய ரெஸ்யூமை என்னிடம் தந்து "உங்களுடைய துறையில் ஏதேனும் காலியிடங்கள் இருந்தால் இவரை கருத்தில் கொள்ளுங்கள்" என்றார். நான் அந்த ரெஸ்யூமைப் பார்த்தேன், அந்த நபர் வேலைக்குத் தகுதியானவராகத் தோன்றுகிறார். நான் என்ன செய்ய வேண்டும்?

பதில்: நீங்கள் இந்தக் கோரலைப் பற்றி உடனடியாக உங்கள் மேலாளர் அல்லது ஒரு சட்ட இணக்க நிபுணரிடம் தெரி-விக்கவேண்டும். இந்த விண்ணப்பதாரருக்குச் சரியான தகுதிகள் இருப்பதால், அதே பதவிக்குத் தகுதியுள்ள மற்ற விண்ணப்பதாரர்களை எப்படி நடத்துகிறோமோ அதேபோல் இவரையும் நாம் நடத்தவேண்டும். இதுபோன்ற கோரல்களை நாம் மிகவும் கவனமாகக் கையாளவேண்டும், நாம் சட்டத்தை மதிக்கவேண்டும், நாம் மதிப்பீடுக-ளைப் பின்பற்றவேண்டும், அதேசமயம் நமது உறவுகளையும் தக்கவைத்துக்கொள்ளவேண்டும்.

பரப்புரை செய்தல் மற்றும் அரசியல் பங்கேற்பு

பரப்புரை செய்தல் மற்றும் அரசியல் சார்ந்த பங்களிப்புகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் மிகவும் சிக்கலானவையாக இருக்கலாம், நாம் தொழில் நடத்தும் பகுதிகள் ஒவ்வொன்றிலும் இவை வெகுவாக வேறுபடலாம். ஆகவே நாம் நிதி வழங்குதல் மற்றும் ஆதரவுக்குப் பரப்புரை செய்தல் மற்றும் அரசியல் சார்ந்த பங்களிப்புகள் ஆகியவற்றை மிகவும் கவனத்துடன் அணுகவேண்டும்.

இப்படிப்பட்ட பிரச்சனைகளைக் கையாளுவதற்கான அதிகாரம் பெற்ற குறிப்பிட்ட அலுவலகப் பிரதிநிதியின் எழுத்துபூர்வமான ஒப்புதல் இல்லாமல் மேக்னாவின் சார்பாக எந்த ஓர் அரசாங்க நிலையிலும் பரப்புரை செய்தல் அல்லது அரசியல் சார்ந்த பங்களிப்புகளை வழங்குதல் (பண நன்கொடைகள், பொருட்கள் அல்லது சேவைகள் உட்பட) ஆகியவற்றில் ஈடுபடாதீர்கள். மேலும் விவரங்களுக்கு ஒரு சட்ட இணக்க நிபுணர் அல்லது அரசாங்க விவகாரக்குழுவின் ஓர் உறுப்பினரிடம் பேசுங்கள் அல்லது MagNETல் உள்ள அரசு விவகாரங்கள் பக்கத்துக்குச் செல்லுங்கள்.

கேள்வி: மேக்னா ஒரு புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான கட்டட வடிவமைப்பை உருவாக்கியுள்ளது, அதற்கு நகரக் கழக அனுமதி பெறுவதில் சில சிரமங்கள் இருக்கின்றன. நகரக் கழக உறுப்பினர் ஒருவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவரை நான் சந்தித்து இந்தக் கட்டட வடிவமைப்பை அவர் ஏன் ஆதரிக்கவேண்டும் என்பது பற்றி விளக்க விரும்புகிறேன். நான் அவ்வாறு செய்யலாமா?

பதில்: இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்க அலுவலரை நீங்கள் இவ்வாறு சந்திப்பது, ஒரு பொது தீர்மானம் எடுத்தலை பாதிக்கும் நோக்கத்தோடு நடைபெறுகிறது என்பதால் உள்ளூர்ச் சட்டத்தின்படி பரப்புரை செய்தலாகக் கருதப்படும். இப்படிப்பட்ட பிரச்சனைகளைக் கையாளுவதற்கான அதிகாரம்பெற்ற குறிப்பிட்ட அலுவலகப் பிரதிநிதியின் எழுத்துபூர்வமான ஒப்புதல் இல்லாமல் மேக்னாவின் சார்பாக எந்த ஒரு பரப்புரை நடவடிக்கையிலும் ஈடுபடாதீர்கள்.

Driving Integrity
Know it.
Speak it.
Live it.

ஊழியர்கள், மேலாளர்கள் என நாம் அனைவரும் மேக்னாவின் வெற்றியை உறுதிசெய்யும் பொறுப்பைப் பகிர்ந்துகொள்கிறோம் என்பதே நமது செயல்பாட்டுத் தத்துவமாகும். இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் எல்லாரும் ஒருமைப்பாட்டுடன் செயல்படவேண்டும். நமக்குப் பொருந்துகிற சட்டங்களை நாம் எழுத்துபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் பின்பற்றவேண்டும், இந்த நெறிமுறைகளின் படி நடக்கவேண்டும், நாம் கொடுத்த வாக்குகளைக் காப்பாற்றவேண்டும் என்பதே இதன் அர்த்தம்.

வெளிப்படையான அறிக்கை சமர்ப்பித்தல் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

நிதி அறிக்கை பதிவு செய்தல் 12

முறையற்ற பங்கு பத்திர வணிகம் 13

பொது வெளிப்பாடுகள் 13

நிதிநிலை அறிக்கை வழங்குதல்

மேக்னாவின் நம்பகத்தன்மை, நமது நிதிநிலை அறிக்கைகளின் துல்லியத்தைப் பொறுத்து அமைகிறது, நிதிநிலை அறிக்கைபற்றிய பொருந்தும் அனைத்து சட்டங்களையும் நாம் பின்பற்றவேண்டும். நமது நிதிநிலை உள்ளீடுகளை நாம் எப்போதும் துல்லியமாகச் செய்யவேண்டும்.

நமது நிதிநிலை சார்ந்தக் கட்டுப்பாடுகள் நமது அறிக்கைகள் துல்லியமாகவும் சரியான நேரத்திற்கும் வெளியாவதை உறுதிசெய்யும்வகையில் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. தவறான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய உள்ளீடுகளின் மூலம் இந்தக் கட்டுப்பாடுகளை மீறுவதற்கு யாரேனும் நடவடிக்கை எடுத்தால் அல்லது பிறரை நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட்டால் அதனை நாம் பொறுத்துக்கொள்ள மாட்டோம். அப்படிச் செய்வது கடுமையான நெறிமுறை மீறல் ஆகும், அது குற்றச்செயலாகவும் இருக்கலாம்.

கேள்வி: நான் கணக்கியல் பிரிவில் பணிபுரிகிறேன். சமீபத்தில் பெரிய அளவிலான வழங்குநர் இன்வாய்ஸ்கள் பல என்னிடம் வந்தன. என்னுடைய மேலாளர் இவற்றை நான் அடுத்த காலாண்டில் பதிவுசெய்ய வேண்டும் என்றார். காரணம் இந்த இன்வாய்ஸ்களை அடுத்த காலாண்டில் பதிவுசெய்தால், நம்முடைய நிதிநிலை முடிவுகள் இன்னும் சிறப்பாக அமையும், நமது பங்குகளின் விலையும் மேம்படும் என்று அவர் சொன்னார். அவர் சொன்னதை நான் பின்பற்ற வேண்டுமா?

பதில்: இல்லை. செலவுகளுக்கு தவறான தேதிகளை இடுவது அல்லது அவற்றைத் தாமதமாகப் பதிவு செய்வது என்பது இந்தக் காலாண்டில் நமது வருவாய் அதிகமாகக் காட்டப்படும், அது நமது நிதிநிலை அறிக்கைகளைப் பாதிக்கக்கூடும். அனைத்து நிதிநிலை சார்ந்தத் தகவல்களையும் துல்லியமாகப் பதிவு செய்யாமல் இருப்பது இந்த நெறிமுறையை மீறுவதாகும், பொதுவாக ஒப்புக்கொள்ளப்படும் கணக்கியல் கொள்கைகளையும் மீறுவதாகும், அது மேக்னாவுக்கு உதவும் நோக்குடன் செய்யப்பட்டிருந்தாலும் சரி. உங்களுடைய மேலாளர் உங்களை அவ்வாறு செய்யத்தூண்டினால் நீங்கள் மறுத்துவிட வேண்டும். உங்களுக்கு இது அசௌகரியமாக இருந்தால் அல்லது உங்களுடைய மேலாளர் உங்களுக்கு தொடர்ந்து அழுத்தம் தந்தால் நீங்கள் உடனடியாக இதைப்பற்றி உங்களுடைய குழு அல்லது நிறுவன அலுவலகத்தில் உள்ள ஒரு நிதிநிலை அலுவலர் அல்லது ஒரு சட்ட இணக்க நிபுணரிடம் புகார் செய்ய வேண்டும். இந்தப் பிரச்சனையை குட் பிஸினஸ் லைன் மூலமும் புகார் செய்யலாம்.

முறையற்ற பங்கு பத்திர வணிகம்

நம் ஊழியர்கள் சிலருடைய பணிவகை காரணமாக, சில நேரங்களில் மேக்னா பற்றிய, நமது வழங்குநர்கள் பற்றிய, போட்டியாளர்கள் பற்றிய, வாடிக்கையாளர்கள் பற்றிய அல்லது தொழில்முறைக் கூட்டாளிகள் பற்றிய ரகசியமான விவரங்கள் அவர்களுக்குக் கிடைக்கக்கூடும். இந்த **உள்விவரங்களை** அந்த ஊழியர் முதலீட்டுக் காரணங்களுக்காகப் பயன்படுத்தினால், மற்ற முதலீட்டாளர்களை ஒப்பிடும்போது அந்த ஊழியர் ஒரு நியாயமற்ற நன்மையைப் பெறக்கூடும். உள்விவரங்களின் படி பங்குகள் மற்றும் பத்திரங்கள் போன்ற பாதுகாப்பு ஆவணங்களை வாங்குதல் அல்லது விற்றல் சட்டவிரோதமானது மற்றும் இதற்கான தண்டனைகள் மிகத்தீவிரமாக இருக்கக்கூடும். ஆகவே மேக்னா அல்லது இன்னொரு நிறுவனம் பற்றிய உள்விவரங்கள் உங்களுக்குக் கிடைத்தால் அந்த விவரம் பொதுவில் வெளியாகி மற்ற முதலீட்டாளர்கள் அதை மதிப்பீடு செய்யும் வரை நீங்கள் அந்த நிறுவனத்தில் முதலீடு செய்யக்கூடாது.

இந்த உள்விவரங்களை சக ஊழியர்கள் அல்லது மேக்னாவுக்கு வெளியே உள்ளவர்களிடம் இந்த உள்விவரங்களைப் பெறுவதற்கான அதிகாரம் இல்லாத சக ஊழியர்கள் அல்லது மேக்னாவிற்கு வெளியே உள்ளவர்களிடம் இவற்றைப் பகிர்ந்துகொள்ளவும் ஊழியர்களுக்கு அனுமதி இல்லை. இந்தத் தடை, உள்விவரங்களை **உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களிடம் பகிர்ந்து கொள்வதற்கும் பொருந்தும்.**

இதுபற்றி மேக்னாவின் இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் மற்றும் பிற நியமிக்கப்பட்ட நபர்கள் இன்னும் கவனமாக இருக்கவேண்டும். அவர்களுடைய தேவைகள் உள்வர்த்தகம் மற்றும் அறிக்கை பதிவுசெய்தல் கொள்கையில் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த நபர்கள் மேக்னாவின் பாதுகாப்பு ஆவணங்களை சில குறிப்பிட்ட காலகட்டங்களில் வாங்கக்கூடாது அல்லது விற்கக்கூடாது.

நமது உள்வர்த்தகம் மற்றும் அறிக்கை வழங்குதல் கொள்கை உள் வர்த்தகம் மற்றும் முறையற்ற வெளிப்பாடை எப்படித் தவிர்ப்பது என்பதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது.

Driving Integrity
Know it.
Speak it.
Live it.

கேள்வி: உள் அறிக்கைகளின்படி மேக்னாவின் விற்பனை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பது எனக்குத் தெரியவருகிறது, இந்தக் காலாண்டில் நம்முடைய லாபம் தொழில்துறை ஆய்வாளர்கள் எதிர்பார்ப்பதைவிட அதிகமாக இருக்கும் என்பது எனக்குத் தெரியவந்துள்ளது. நாம் நமது காலாண்டு வருவாய்களை பொதுவில் அறிவிப்பதற்கு முன்னால் மேக்னா பங்குகளை வாங்குமாறு என் சகோதரிக்குச் சொல்லலாமா?

பதில்: இல்லை. உள்விவரங்களை உங்களுடைய நன்மைக்கோ, பிறருடைய நன்மைக்கோ, உங்களுடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடைய நன்மைக்கோ பயன்படுத்துவது நமது நெறிமுறைகளுக்கு முரணானது, சட்டவிரோதமானது.

பொது வெளிப்பாடுகள்

மேக்னா ஒரு பொது நிறுவனம். ஆகவே தனது பொது ஆவணங்களில் முழுமையான, துல்லியமான, பொதுவான விவரங்களை வழங்கவேண்டிய பொறுப்பு மேக்னாவுக்கு உள்ளது. இந்தப் பொறுப்பை நாம் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம், நமது தொழில், செயல்பாடுகள் மற்றும் நிதிநிலை போன்றவற்றை வெளிப்படுத்துவது தொடர்பான அனைத்துச் சட்டங்களையும் பின்பற்றுவதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம். இந்தச் சிக்கலான சட்ட தேவைகளுக்கு இணங்குவதற்காக மேக்னா ஒரு நிறுவன வெளிப்படுத்துதல் குழுவை அமைத்துள்ளது. இதில் மூத்த நிறுவன மேலாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஊடகங்களிடம் அல்லது பங்குதாரர்களிடம் பேசுவதற்கு அல்லது எந்தவிதமான பொது வெளிப்பாட்டையும் நிகழ்த்துவதற்கு அதிகாரம் பெற்ற எந்த ஒரு ஊழியரும் பொருந்துகிற பாதுகாப்பு ஆவணச் சட்டங்கள் மற்றும் நம்முடைய நிறுவன வெளிப்படுத்துதல் கொள்கை ஆகியவற்றுக்கு இணங்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு நமது பொது வெளிப்படுத்துதல் கொள்கையை காணுங்கள்.

நமது பணியிடத்தில் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

சுற்றுச்சூழல் மற்றும் பணிசார்ந்தப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம்	15
தனிப்பட்ட விவரங்களைப் பாதுகாத்தல்	15
மனித உரிமைகளை மதித்தல்	16
பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்குதல்	16

சர்வதேச நிறுவனமான மேக்னாவின் பலங்களில் ஒன்று நமது ஊழியர்கள் பன்முகத்தன்மையோடு இருத்தல். ஆகவே பல பின்னணிகளிலிருந்து வருகிற பல திறமைகளைக் கொண்ட பல கருத்துகளைக்கொண்ட மக்களை நாம் மதிக்கிறோம்.

சுற்றுச்சூழல் மற்றும் பணிசார்ந்தப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம்

மேக்னா ஊழியர்கள் ஒரு சுத்தமான மற்றும் சுகாதாரமான சூழ்நிலைகளில் வேலைசெய்வது அவசியம். நமது எல்லா செயல்பகுதிகளிலும் தொழில்சார்ந்த ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சுற்றுச்சூழல் பொறுப்புகளில் நாம் இந்தத் தொழில்துறையின் தலைவர்களாகத் திகழ விரும்புகிறோம்.

நமக்குப் பொருந்துகிற அனைத்து ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை பின்பற்றவோ அல்லது அதைவிடச் சிறப்பாகச் செயல்படவோ உறுதிபூண்டுள்ளோம், நமது செயல்பாடுகள் ஒவ்வொன்றையும் தொடர்ந்து முன்னேற்றும் இலக்குடன் கவனித்து ஆராய்வதற்கு உறுதிபூண்டுள்ளோம்.

ஆரோக்கியம் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலுக்கான நமது உறுதிப்பாடு நமது ஊழியர் சாசனத்திலும் நமது செயல்பாட்டுக்கொள்கைகளிலும் விளக்கப்பட்டுள்ளது. நமது ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் கொள்கையில் இன்னும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட விவரங்களைப் பாதுகாத்தல்

நாம் நமது ஊழியர்களின் தனியுரிமைகளை மதிக்கிறோம், அவர்களுடைய தனிப்பட்ட விவரங்களைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளோம். நியாயமான பணி அல்லது தொழில் நோக்கங்களுக்காகவோ அல்லது சட்டத்தால் கோரப்பட்டால் மட்டுமே சேகரிப்போம், பயன்படுத்துவோம் மற்றும் வெளிப்படுத்துவோம். நாம் சேகரித்துள்ள தனிப்பட்ட விவரங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் நாம் எடுப்போம்.

Driving Integrity
Know it.
Speak it.
Live it.

கேள்வி: நான் ஒரு பிரிவில் மனித வளத்துறையில் பணிபுரிகிறேன். சமீபத்தில், நம்முடைய ஊழியர்கள் அனைவருடைய வீட்டு முகவரியைத் தருமாறு ஒரு சந்தைப்படுத்துதல் நிறுவனம் என்னிடம் கேட்டது, அதைப் பயன்படுத்தி அவர்கள் ஒரு புதிய மருத்துவமனை பற்றிய மதிப்புள்ள விவரங்களை அவர்களுக்கு அனுப்புவார்கள். இந்த விவரத்தின் மூலம் ஊழியர்கள் பலன்பெறக்கூடும் என்றாலும் நான் அந்தச் சந்தைப்படுத்துதல் நிறுவனத்திற்கு முகவரிகளைத் தர மறுத்துவிட்டேன். நான் செய்தது சரியா?

பதில்: ஆம். நீங்கள் செய்தது சரி. நமது ஊழியர்களின் வீட்டு விவரங்கள் தனிப்பட்ட விவரங்கள் ஆகும், அவற்றை நியாயமான தொழில் மற்றும் பணிக்காரணங்களுக்காக அல்லது சட்டத்தால் கோரப்பட்டால் மட்டுமே வெளிப்படுத்தவேண்டும். இந்தச் சூழலில், ஒரு சேவையை ஊழியர்கள் மத்தியில் சந்தைப்படுத்துதல் என்பது இந்தத் தனிப்பட்ட விவரத்தை வெளிப்படுத்துவதற்குப் போதுமான, ஏற்கக்கூடிய காரணம் அல்ல. நீங்கள் அப்படிச்செய்தால் நீங்கள் நெறிமுறைகளை மீறியவர்களாவீர்கள், உள்ளூர் தனியுரிமைச் சட்டங்களின்படி இது சட்டவிரோதமாகவும் இருக்கலாம்.

மனித உரிமைகளை மதித்தல்

நமது ஊழியர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் மனித உரிமைகளை மதித்தல் நமது தொழிலுக்கு முக்கியம். நமக்குப் பொருந்தும் அனைத்து மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கும் இணங்குவதற்கு நாம் விரும்புகிறோம்.

நாம் நமது ஊழியர்களுக்கு நியாயமான பணிச்சூழல்களை வழங்குகிறோம், நமது வழங்கல் சங்கிலியில் குழந்தைத் தொழிலாளர்கள் அல்லது கட்டாயத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதை நாம் ஊக்குவிப்பதில்லை. நம்முடைய வழங்குநர்கள் மற்றும் நம்முடன் பணிபுரியும் எந்த ஒரு நிறுவனமும் தொழில் ஒழுக்கத்தின்படி நடந்துகொள்ளவேண்டும், சட்டத்திற்கு இணங்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

கேள்வி: நமது வழங்குநர்களில் ஒருவர் குறைந்த வயதுத் தொழிலாளர்களைப் பயன்படுத்துகிறார் என்று நான் சந்தேகிக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?

பதில்: நம்முடைய வழங்குநர்களில் ஒருவர் குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துகிறார் என்று உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால், நீங்கள் உடனடியாக அதைப் பற்றி உங்களுடைய மேலாளர் அல்லது ஒரு சட்ட இணக்க நிபுணரிடம் புகார் செய்ய வேண்டும்.

கேள்வி: நமது ட்ராய், மிச்சிகன் அலுவலகத்தில் உள்ள ஒருவருக்கு பதவி உயர்வு தருவது பற்றி நான் சிந்தித்துக்கொண்டு இருக்கிறேன். இந்தப் புதிய பதவியில் அவர் நமது வட அமெரிக்க வழங்குநர்களுடன் பணிபுரிய வேண்டியிருக்கும். அவருக்கு எல்லாத் தகுதிகளும் உள்ளன, ஆனால் அவருக்கு உடல் சார்ந்தக் குறைபாடு ஒன்று இருக்கிறது. ஆகவே நம்முடைய வழங்குநர்களில் சிலர் அவருடன் பணிபுரிய அசௌகரியப்படுவார்களோ என்று எனக்குக் கவலையாக உள்ளது. இந்தக் காரணத்திற்காக அந்தப் பதவி உயர்வை நான் இன்னொருவருக்குத் தரலாமா?

பதில்: இல்லை. சட்டப்படி பாதுகாக்கப்பட்ட காரணங்களான உடல்சார்ந்த ஊனம் போன்றவை தொடர்பாக, எந்தவிதப் பாரபட்சமும் இல்லாமல் நாம் அனைவருக்கும் சமமான முன்னேற்ற வாய்ப்புகளை வழங்க முனைகிறோம். புதிய பதவிக்கான சரியான தகுதிகள் அந்த ஊழியருக்கு இருந்தால் அவரது உடல் சார்ந்த ஊனத்தை அடிப்படையாகக் கொண்டு அவரது பதவி உயர்வை மறுக்கக்கூடாது.

Driving Integrity
Know it. Speak it. Live it.

பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்குதல்

சர்வதேச நிறுவனமான மேக்னாவின் பலங்களில் ஒன்று நமது ஊழியர்கள் பன்முகத்தன்மையோடு இருத்தல். ஆகவே பல பின்னணிகளிலிருந்து வருகிற பல திறமைகளைக் கொண்ட பல கருத்துகளைக்கொண்ட மக்களை நாம் மதிக்கிறோம்.

பொருந்துகின்ற அனைத்து ஊழியர் மற்றும் பணிச்சட்டங்களையும் நாம் மதித்து நடக்கிறோம். உதாரணமாக, பாரபட்சம் காட்டுதல் மற்றும் துன்புறுத்துதலைத் தடுக்கும் சட்டங்கள், வேறுபாடுகளுக்குச் சரியாக இடமளிக்கும் சட்டங்கள் போன்றவை. நாம் அனைவருக்கும் சமமான பணிவாய்ப்பு, பணி முன்னேற்ற வாய்ப்புகளை வழங்க உறுதிபூண்டுள்ளோம். பாலினம், இனம், கலாசாரப் பின்னணி, மதம், ஊனம் அல்லது சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட வேறு எந்தத் தனிப்பட்ட பண்புக்காகவும் நாம் ஒருவர்மீது பாரபட்சம் காட்டமாட்டோம்.

நமது செயல்பாடுகளின் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

ரகசியமான விவரங்களைப் பயன்படுத்துதல் 19

முதலீடுகள் மற்றும் நிறுவன வாய்ப்புகள் 19

தன்னைக் கையாளுதல் மற்றும் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் பழகுதல் 20

வெளிப்பதவிகள் 21

பரிசுகள், உணவுகள் மற்றும் பொழுதுப்போக்கு 21

ரகசியமான விவரங்களைப் பயன்படுத்துதல்

மற்ற சொத்துகளைப் போலவே ரகசியமான விவரங்களும் நம்முடைய தொழிலின் மதிப்பு மிக்க பகுதிகள், அவற்றைப் பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு உண்டு. உதாரணமாக நமது நிறுவனம், நமது வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குநர்கள் தொடர்பான தொழில் ரகசியங்கள் மற்றும் தனியுரிமை விவரங்கள். அப்படிப்பட்ட விவரங்கள் சட்டப்படி கோரப்பட்டாலன்றி அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டாலன்றி, மேக்னா-விற்கு வெளியே யாரிடமும் அவற்றைப் பகிர்ந்துகொள்ளக்கூடாது.

கேள்வி: மேக்னாவின் ரகசிய விவரங்களைப் பாதுகாக்க நான் என்ன செய்யலாம்?

பதில்: மேக்னா தனது ரகசிய விவரங்களைப் பாதுகாக்க நீங்கள் பல வழிகளில் உதவலாம். நீங்கள் ரகசியமான பதிவுகள் மற்றும் விவரங்களை மிகவும் கவனத்துடன் கையாளவேண்டும், உங்களுடைய எலெக்ட்ரானிக் சாதனங்களை நீண்ட நேரம் கவனிக்காமல் விட்டுச்செல்லக்கூடாது. குறிப்பாக நீங்கள் பயணம் செய்யும்போது அல்லது தொழில் சார்ந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது இந்த விஷயத்தில் மிக கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் மேக்னாவின் தொழில் சார்ந்த விஷயங்களை பொது இடங்களில் விவாதிப்பதையும் தவிர்க்கவேண்டும். உதாரணமாக அதிக நபர்கள் உள்ள ஒரு லிஃப்டிலோ விமானத்திலோ நீங்கள் தொழிலைப் பற்றிப் பேசக்கூடாது.

முதலீடுகள் மற்றும் நிறுவன வாய்ப்புகள்

மேக்னாவின் ஊழியர்கள் என்ற முறையில் நமது தனிப்பட்ட ஆர்வங்கள் மேக்னாவின் ஆர்வங்களுக்கு முரணாக அமைகின்ற சூழல்களை அல்லது அப்படித் தோன்றுகின்ற சூழல்களை நாம் தவிர்க்கவேண்டும்.

உதாரணமாக, நீங்கள் உங்களுடைய பதவி காரணமாகவோ மேக்னாவின் சொத்து அல்லது விவரத்தைப் பயன்படுத்தியோ ஒரு தொழில் வாய்ப்பு பற்றிக் கண்டறிந்தால் நீங்கள் அதன்மூலம் தனிப்பட்ட பலன் பெறக்கூடாது. நீங்கள் மேக்னாவின் வளங்களை உங்களுடைய தனிப்பட்ட பலன்களுக்காகப் பயன்படுத்துவது கூடாது. உங்களை மேக்னாவின் போட்டியாளராக ஆக்கக்கூடிய எந்த ஒரு நடவடிக்கையிலும் நீங்கள் பங்குபெறக்கூடாது.

ரகசியமான விவரங்கள் என்பவை நம்முடையதொழிலின்மதிப்புமிக்க பகுதிகள் ஆகும், அவற்றை பாதுகாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

Driving Integrity
Know it. Speak it. Live it.

கேள்வி: நான் பொறியியல் துறையில் பணிபுரிகிறேன். என்னுடைய வேலையின் ஒரு பகுதியாக நான் ஒரு புதிய பரிமாற்ற வடிவமைப்பை உருவாக்கியுள்ளேன், இந்த வடிவமைப்பு நமது தானியங்கித் தயாரிப்பு வாடிக்கையாளர்கள் சிலருக்கு ஆர்வமூட்டும் என்று நான் நினைக்கிறேன். நான் இந்த வடிவமைப்பை உருவாக்கியதால் நான் அதனை அவர்களிடம் நேரடியாக சந்தைப்படுத்தலாமா?

பதில்: கூடாது, நீங்கள் அப்படி செய்தால் நீங்கள் நெறிமுறைகளை மீறியவர்கள் ஆவீர்கள். நீங்கள் உங்களுடைய வேலையின்போது உருவாக்குகிற எந்த ஒரு அறிவுசார் சொத்தும் மேக்னாவுக்கு சொந்தமானது. அதோடு நீங்கள் மேக்னாவில் பணியாற்றும்போது மேக்னாவின் வளங்களை பயன்படுத்தி உருவாக்கிய வடிவமைப்பு மேக்னாவுக்கு ஒரு மதிப்புமிக்க தொழில் வாய்ப்பை வழங்குகிறது. நீங்கள் மேக்னாவிடம் அனுமதி கோராமல் அதை தனிப்பட்ட முறையில் உங்களுக்கு பலன் அளிக்கும் வகையில் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது.



தன்னை கையாளுதல் மற்றும் உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் பழகுதல்

நமது தனிப்பட்ட ஆர்வங்களும் உறவுகளும் நம்முடைய பணிசார்ந்தப் பொறுப்புகளுடன் குறுக்கிட நாம் அனுமதிக்கக்கூடாது. ஆகவே நம்மில் யாரும் நம்முடைய உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களை நேரடியாக மேற்பார்வை செய்யக்கூடாது அல்லது அவர்களுக்கு நேர் கீழே பணிபுரியும் தொழில் உறவைக் கொண்டிருக்கக்கூடாது. அதேபோல், இவர்களை அல்லது இவற்றைப் பணிக்கு சேர்க்கிற, மதிப்பிடுகிற, இவர்கள் அல்லது இவற்றுக்கு நிதி வழங்குகிற அல்லது இவர்கள் அல்லது இவற்றுடன் ஒப்பந்தம் செய்துகொள்கிற அல்லது மற்ற தொழில் உறவுகளை ஏற்படுத்துகிற ஒரு பதவியில் நாம் இருக்கக்கூடாது: ஓர் உறவினர் அல்லது நெருங்கிய நண்பர் அல்லது நாமோ, நமது உறவினர் ஒருவரோ, நெருங்கிய நண்பர்களில் ஒருவரோ குறிப்பிடத்தக்க ஆர்வத்தைக் கொண்டுள்ள ஒரு தொழில் அல்லது நிறுவனம்.

குறிப்பாக ஓர் உறவினர் அல்லது நெருங்கிய நண்பரின் பதவியாலோ, ஆர்வங்களாலோ நீங்களோ உங்களுடைய உறவினர்களோ, நெருங்கிய நண்பர்களோ இன்னொரு தொழில் அல்லது நிறுவனத்தில் கொண்டிருக்கிற ஏதேனும் ஒரு குறிப்பிடத்தக்க ஆர்வத்தாலோ உங்களுடைய பணித் தீர்மானங்கள் பாதிக்கப்படலாம் என்றோ, பாதிக்கப்பட்டிருப்பதாகவோ உங்களுக்கு தோன்றினால் நீங்கள் உடனடியாக உங்களுடைய மேற்பார்வையாளருக்கு அதைத் தெரிவிக்கவேண்டும். அதன்பிறகு, அனைத்து நடவடிக்கைகளும் தீர்மானங்களும் ஒரு நியாயமான மற்றும் வெளிப்படையான அடிப்படையில் நிகழ்த்தப்படுவதை உறுதிசெய்வதற்காக எந்த ஒரு செயல்முறை அமலுக்குக் கொண்டுவரப்பட்டாலும் அதனுடன் நீங்கள் இணங்கவேண்டும்.

கேள்வி: நான் வாங்கும் பிரிவில் வாங்குகின்ற பணியில் இருக்கிறேன். நம்முடைய வழங்குநர் நிறுவனங்களின் ஒன்றில் விற்பனை பிரிவின் தலைவராக என்னுடைய மனைவி சமீபத்தில் வேலைக்கு சேர்ந்துள்ளார். இது முரணாகுமா?

பதில்: ஆம். உங்களுடைய மனைவியின் புதிய பதவி உங்களுடைய தொழில் தீர்மானங்களை பாதிக்கக்கூடும் அல்லது பிறர் அவ்வாறு நினைக்கக்கூடும். ஆகவே நீங்கள் உங்களுடைய மேற்பார்வையாளரை அணுகி இந்த விவரத்தை தெரிவிக்கவேண்டும். இதன்மூலம் மேலாண்மை குழு சூழ்நிலைகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க இயலும். இப்படி செய்வது மேக்னாவுக்கு உதவுகிறது, நீங்களோ உங்கள் மனைவியோ தவறான தொழில் நடத்தையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்படுவதிலிருந்து உங்களை பாதுகாக்கிறது.

Driving Integrity
Know it. Speak it. Live it.

வெளி பதவிகள்

மேக்னா வெற்றியடைய உதவுவதற்கு நாம் பணி நேரங்களின்போது நமது முழு நேரத்தையும் முழு கவனத்தையும் நம்முடைய பணிகளுக்கு தரவேண்டும். ஆகவே நீங்கள் உங்களுடைய பணிக்கு தரக்கூடிய நேரம் மற்றும் கவனத்தை குறைக்கக்கூடிய எந்த ஒரு வெளி பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

மேக்னாவுடன் ஓர் ஆர்வ முரணை ஏற்படுத்தக்கூடிய அல்லது அப்படி ஒரு தோற்றத்தைத் தரக்கூடிய சம்பளமுள்ள அல்லது சம்பளமில்லாத பதவிகள் எவற்றையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது, ஒருவேளை அப்படி ஏற்றுக்கொ-ண்டால், அதை நீங்கள் முன்கூட்டியே உங்களுடைய கண்காணிப்பாளரிடம் விவாதித்து உரிய அனுமதிகளைப் பெற்றி-ருக்கவேண்டும்.

பரிசுகள், உணவுகள் மற்றும் பொழுதுபோக்கு

நமது தொழில் கூட்டாளிகள் அனைவருடனும் நம்முடைய உறவானது உறுதிப்பாடு மற்றும் நல்ல தொழில் தீர்மான-த்தின் அடிப்படையில் அமையவேண்டும். ஆகவே நாம் சிலருக்கு ஏதாவது பரிசுகளைக் கொடுத்தால் அல்லது அவர்க-ளிடமிருந்து பரிசுகளைப் பெற்றுக்கொண்டால் அல்லது அவர்களுடன் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டால், நியாயமான நடைமுறைகள் மற்றும் மேக்னாவுக்குப் பலன் தரக்கூடிய தீர்மானங்களை எடுத்தல் ஆகியவற்றுக்கு நாம் நம்மை அர்ப்பணித்துக்கொண்டிருப்பதில் சமரசம் செய்துவிடக்கூடாது அல்லது சமரசம் செய்துவிட்டதாகத் தோன்ற-க்கூடாது, இதில் நாம் கவனமாக இருக்கவேண்டும்.

வாடிக்கையாளர்கள் அல்லது வழங்குநர்களுடன் நாம் கொண்டிருக்கும் தொழில் உறவில் அவ்வப்போது தொழில் சார்ந்தப் பரிசுகள் அல்லது பொழுதுபோக்குகள் ஆகியவற்றை கொடுப்பதும் பெறுவதும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, ஆனால் இந்தப் பரிசுகளும் பொழுதுபோக்கும் ஏற்கக்கூடியவையாக இருக்கவேண்டும், எப்போதாவது தரப்படுப-வையாக இருக்கவேண்டும் மற்றும் இவற்றின் மதிப்பு மிதமான அளவில் இருக்கவேண்டும். நாம் வழங்குகிற பரிசோ, பொழுதுபோக்கோ நமது செலவு அறிக்கைகள் மற்றும் மேக்னாவின் ஆவணப்புத்தகங்கள் மற்றும் பதிவுகளில் துல்லிய-மாகவும் வெளிப்படையாகவும் பதிவுசெய்யப்படவேண்டும்.

அதிகரித்துவரும் சட்ட ஆபத்துகள் காரணமாக, அரசுஅலுவலர்களுடன் பழகும்போது நாம் எல்லாரும் கூடுதல் கவன-த்துடன் இருக்கவேண்டும். அரசு அலுவலர்களுக்கு பரிசுகள் அல்லது பொழுதுபோக்கை வழங்குவதற்கு முன்னால் மேக்னாவில் இதற்கான அனுமதியை வழங்கும் அங்கீகாரம் பெற்ற சிலரிடம் எழுத்து மூலம் ஒப்புதல் பெறவேண்டும். தேவைப்படும் ஒப்புதல்பற்றிய ஒரு விவாதம், பரிசுகள் மற்றும் பொழுதுபோக்குபற்றிய கூடுதல் விவரங்களை நமது பரிசுகள் & பொழுதுபோக்குக் கொள்கையில் காணலாம்.

கேள்வி: எனக்கு பிடித்த அணி சேம்பியன்ஷிப் போட்டியில் விளையாடுவதை நான் பார்ப்பதற்காக விமானச்சீட்டு வாங்கித்தருவதாக நம்முடைய வழங்குநர்களில் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இது அனுமதிக்கப்பட்டுள்ளதா?

பதில்: இல்லை. நமது தொழில் தீர்மானங்கள் எப்போதும் மேக்னாவின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு எடுக்கப்படவேண்டும். இந்த ஆடம்பரமான பரிசை நீங்கள் ஏற்றுக்கொண்டால் அடுத்த முறை சில பொருள்களை யாரிடமிருந்து வாங்குவது என்கிற கேள்வி எழும்போது நீங்கள் இந்த வழங்குநருக்கு ஆதரவாக தீர்மானம் எடுக்கக்கூடும் என்கிற தோற்றம் உருவாகும். ஏற்க-க்கூடிய, எப்போதாவது தரப்படுகிற மற்றும் மிதமான மதிப்பைக் கொண்ட தொழில் பரிசுகள் மற்றும் பொழுதுபோக்குகளை மட்டுமே நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம். உங்களுக்கு இதுபற்றி ஏதேனும் சந்தேகம் இருந்தால் உங்களுடைய பொது மேலாளர் அல்லது ஒரு சட்ட இணக்க நிபு-ணரிடம் பேசுங்கள்.

கேள்வி: கடந்தச் சில ஆண்டுகளில் என்னுடைய பிரிவில் சுற்றுச்சூழல் தணிக்கைகளை நடத்திய ஓர் அரசுத் தணிக்கையாளருக்கு அடுத்த மாதம் குழந்தை பிறக்கப்போகிறது. நான் அவருக்கு ஒரு பாட்டில் விஸ்கியை பரிசாக அளிக்க விரும்புகிறேன். இதற்கு அனுமதி உண்டா?

பதில்: ஓர் அரசாங்க அலுவலருக்கு ஓர் பரிசை அல்லது பொழுதுபோக்கை வழங்குவதில் கூடுதல் கவனம் தேவை, இதற்கான அதிகாரம் பெற்ற ஒரு நபருடைய அனுமதியும் தேவை. நீங்கள் உங்களுடைய பொது மேலாளர் அல்லது ஒரு சட்ட இணக்க நிபுணருடன் பேசவேண்டும்.

நல்ல தகவல் தொடர்பின் மூலம்ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

கவனமான தகவல் தொடர்பு 23

தி குட் பிசினஸ் லைன் 24

கவனமான தகவல் தொடர்பு

பணியில் உள்ளபோதும் பணிக்கு வெளியிலும் நாம் என்ன எழுதுகிறோம், என்ன சொல்கிறோம் என்பவை நம்மிடம் எதிர்பார்க்கப்படும் ஒருமைப்பாடு மற்றும் தரங்களை பிரதிபலிப்பதை நாம் உறுதிசெய்யவேண்டும்.

மேக்னாவின் நற்பெயரையும் உங்களுடைய நற்பெயரையும் பாதுகாப்பதற்கு உங்களுடைய எழுத்துப்பூர்வமான தகவல் தொடர்புகள் அனைத்தும் மிகவும் கவனத்துடன் தயாரிக்கப்படவேண்டும், என்றைக்காவது ஒருநாள் அது பொதுவில் வெளியிடப்படலாம் என்கிற புரிந்துகொள்ளலுடன் அதனை எழுதவேண்டும். பணி நேரங்களுக்கு வெளியே, உங்களுடைய சொந்த, தனிப்பட்ட கணிணி அமைப்புகளைப் பயன்படுத்தி இணையத்தில் நீங்கள் தகவல் தொடர்புகளை நிகழ்த்துவதற்கான கருத்து சுதந்தரமும் அனைத்துச் சட்ட உரிமைகளும் உங்களுக்கு உண்டு. அதேசமயம் நீங்கள் சமூக ஊடகங்களில் வெளியிடும் விஷயங்கள் நிறுவனத்திற்குக் களங்கம் விளைவிப்பதாக, வழங்குநர்கள் அல்லது வாடிக்கையாளர்களை இழிவுபடுத்துவதாக, தொழில் ரகசியங்களை வெளிப்படுத்துவதாக அல்லது மேக்னாவின் காப்புரிமை மற்றும் காப்புரிமைப்பட்டய உரிமைகளை மீறாதபடி நீங்கள் கவனமாக பார்த்துக்கொள்ளவேண்டும்.

அத்துடன் ஒரு செய்தி ஊடக நிருபர், ஒரு தொழில் துறை நிபுணர் அல்லது ஒரு பங்குதாரர் மேக்னாவுடன் தொடர்புடைய விஷயங்களை விவாதிக்குமாறு அல்லது கருத்து தெரிவிக்குமாறு உங்களிடம் கேட்டால் நீங்கள் எந்தக் கருத்தையும் தெரிவிக்காமல் அவர்கள் அங்கீகாரம் பெற்ற மேக்னா செய்தி தொடர்பாளருடன் பேசவேண்டும் என்று தெரிவிக்கவேண்டும்.

மேக்னாவின் கவனமான தகவல் தொடர்புக் கொள்கை, நமது சர்வதேச மின்னஞ்சல், இணையம் மற்றும் சமூக ஊடகக் கொள்கை மற்றும் நமது வெளி ஊடகத் தகவல் தொடர்புக் கொள்கைஆகியவை தகவல் தொடர்பு சம்மந்தப்பட்ட பிரச்னைகளை, தீர்வுகளை நன்கு விளக்கும் பயனுள்ள ஆவணங்கள் ஆகும்.

கேள்வி: ஃபேஸ்புக்கில் எனக்கு 250 நண்பர்கள் இருக்கிறார்கள். நம்முடைய வழங்குநர்களில் ஒருவர் என்னை மிகவும் எரிச்சல் படுத்துகிறார், அந்த எரிச்சலை நான் என்னுடைய ஃபேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்துகொள்கிறேன். இதனை நான் என்னுடைய சொந்த நேரத்தில்தான் செய்கிறேன், என்னுடையசெட்டிங்ஸ்தனிப்பட்ட முறையில் அமைக்கப்பட்டுள்ளது இதனால் என்னுடைய நண்பர்கள்மட்டும் குடும்பத்தினர்மட்டும்தான் இவற்றை பார்க்க இயலும். இது அனுமதிக்கப்பட்டுள்ளதா?

பதில்: இல்லை. சமூக ஊடகங்களில் உள்ள பதிவுகள் எப்போதும் தனிப்பட்ட முறையில் இருப்பதில்லை. மேக்னாவின் வழங்குநர்களை நீங்கள் எந்த ஒரு பொது அரங்கிலும் இழிவுபடுத்தக்கூடாது. நமது வழங்குநரைபற்றி நீங்கள் கொண்டுள்ள கவலை, அவர் நெறிமுறைகளை மீறுகிறார் என்பதால் ஏற்பட்டது எனில் நீங்கள் அதை ஒரு மேற்பார்வையாளர் அல்லது ஒரு சட்ட இணக்க நிபுணருக்கு தெரிவிக்கவேண்டும், அல்லதுகுட் பிசினஸ் லைன்ஐ பயன்படுத்தவும். மற்ற கவலைகளை மேக்னாவின் திறந்தக் கதவு செய்முறையை பயன்படுத்தி தீர்ப்பது நல்லது.

கேள்வி: இணையத்தில் உள்ள ஒரு செய்தித்தாள் கட்டுரையில் மேக்னாவின் சமீபத்திய நிதி நிலை அறிக்கைகள் பற்றி துல்லியமற்ற விவரங்கள் வெளியாகியிருப்பதை நான் கண்டேன். அந்தச் செய்தித்தாளின் இணையத்தளத்தில் சரியான விவரத்தை குறிப்பிட்டு நான் ஒரு கருத்தை எழுத விரும்புகிறேன். நான் அப்படி செய்யலாமா?

பதில்: இல்லை. நீங்கள் இந்தத் துல்லியமற்ற விவரத்தைப் பற்றி நிறுவனத் தகவல் தொடர்பு அல்லது முதலீட்டாளர் தொடர்புப் பிரிவில் இருக்கும் யாரிடமாவது உடனே தெரிவிக்கவேண்டும். நீங்கள் மேக்னாவின் தொழில் பற்றி ஏதேனும் எழுதி பதிவு செய்தீர்கள் என்றால் நீங்கள் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்படாத செய்தி தொடர்பாளராக செயல்படுகிறீர்கள்.

பணியில் இருக்கும்போதும்பணிக்கு வெளியிலும் நாம் எழுதுபவை, சொல்பவை நம்மிடம் எதிர்பார்க்கப்படும் ஒருமைப்பாடு மற்றும் தரங்களை பிரதிபலிப்பதைநாம் உறுதிசெய்யவேண்டும்.

தி குட் பிசினஸ் லைன்

இந்த நெறிமுறை அல்லது இதனுடன் தொடர்புடைய கொள்கைகளில் ஏதாவது மீறப்படுவது உங்களுக்கு தெரியவந்தால் நீங்கள் உங்களுடைய மேற்பார்வையாளர் அல்லது ஒரு சட்ட இணக்க நிபுணருடன் பேசலாம்.

நீங்கள் மேக்னாவின் குட் பிசினஸ் லைன்ஐயும் தொடர்புகொள்ளலாம். நீங்கள் ஆன்லைனில் <www.magnagbl.com என்ற இணையத்தளத்தில் ஒரு புகாரைப் பதிவு செய்யலாம் அல்லது உங்களுடைய நாட்டுக்கான உள்ளூர், கட்டணமற்ற தொலைபேசி எண்ணை தேடிக் கண்டறியலாம். இந்தச் சேவை ஒரு சுதந்தரமான வெளி நிறுவனத்தால் வழங்கப்படுகிறது, நாளில் 24 மணிநேரமும் ஆண்டில் 365 நாள்களும் கிடைக்கிறது. சட்டப்படி தடுக்கப்பட்டிருந்தாலன்றி (அப்படி இருந்தால் நீங்கள் உங்கள் புகாரை பதிவு செய்வதற்கு முன்னால் உங்களுக்கு அந்த விவரம் தெரிவிக்கப்படும்) நீங்கள் உங்களுடைய கவலைகளை பெயர் குறிப்பிடாமல் பதிவு செய்யலாம். அதேசமயம் உங்களுடைய கவலைகளை நாங்கள் சரியாக விசாரிப்பதற்கு தேவையான தகவல்களை தயவுசெய்து வழங்குங்கள்.

நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகள் மீறப்படுவது பற்றிய எந்த ஒரு கவலையையும் நல்ல நம்பிக்கையுடன் புகார் செய்வதற்கு நீங்கள் எப்போதும் தயங்கக்கூடாது. நியாயமான கவலைகளை நல்ல நம்பிக்கையுடன் புகார் செய்கிற ஓர் ஊழியருக்கு எதிராக யாரும் செயல்படுவதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். இங்கே எதிராக செயல்படுவது என்பது பல வடிவங்களில் அமையலாம், உதாரணமாக குற்றம் சாட்டப்படுவதல், விடுவிக்கப்படுதல், பதவி இறக்கம் செய்யப்படுதல், தாற்காலிக பணி நீக்கம் செய்யப்படுதல், மிரட்டப்படுதல், அல்லது துன்புறுத்தப்படுதல் போன்றவை. நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகள் மீறப்படுவதைபற்றிய ஓர் உண்மையான கவலையைப் புகார் செய்துள்ள ஒருவருக்கு எதிராக இதுபோன்ற எந்த ஒரு பழிவாங்கும் நடவடிக்கையும் எடுக்கப்படுவதை நாங்கள் பொறுத்துக்கொள்ளமாட்டோம்.

இந்தப் பிரச்சனை பற்றியும் இதற்கான தீர்வுகள் பற்றியும் மேலும் விவரங்களை அறிய நீங்கள் நமது பழிக்குப் பழி வாங்குதலுக்கு எதிரான கொள்கையை காணலாம்.

Driving Integrity
Know it.
Speak it.
Live it.

கேள்வி: என்னுடைய மேற்பார்வையாளர் நெறிமுறைகளை மீறி நடக்கிறார் என்று நான் நினைக்கிறேன், ஆனால் அவர் இப்படி நடந்துகொள்வது பற்றி புகார் செய்தால் என்னுடைய வேலைக்கு ஆபத்து வருமோ என்று நான் கவலைப்படுகிறேன். என்னுடைய மேற்பார்வையாளர் பற்றி நான்தான் புகார் செய்தேன் என்பதை அவர் கண்டறிந்துவிட்டால் மேக்னா என்னை காப்பாற்றுமா?

பதில்: ஆம். நமது பழிக்குப் பழி வாங்குதலுக்கு எதிரான கொள்கை உங்களுடைய மேற்பார்வையாளர் உங்களுக்கு எதிராக எந்தப் பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கையையும் எடுக்கு இயலாதபடி தடுக்கிறது. நெறிமுறைகள் மீறப்படுவது பற்றி நல்ல நம்பிக்கையுடன் புகார் செய்யும் உங்களைப்போன்ற ஊழியர்களை அது பாதுகாக்கிறது.

கேள்வி: நான் குட் பிசினஸ் லைனை பயன்படுத்தி ஒரு விதிமீறல் பற்றி புகார் செய்தால் என்ன நடக்கும்?

பதில்: குட் பிசினஸ் லைன் மூலமாக எங்களுக்கு ஒரு புகார் வந்தால் நாங்கள் அது பற்றி முழுமையான விசாரணை நடத்துவோம், நெறிமுறைகள் மீறப்பட்டுள்ளனவா என்று தீர்மானிப்போம். நாங்கள் பொறுப்பான முறையில் கவனமாக விசாரணையை நடத்துவோம், தேவையான நேரங்களில் நிபுணர்களின் உதவியை நாடுவோம். விதிமுறை மீறல் பற்றிய எந்த ஒரு புகாரும் முதலில் நம்முடைய குட் பிசினஸ் லைன் நிர்வாகிகளால் ஆராயப்படுகிறது. இந்தக் குழுவில் மேக்னாவின் தலைமை இணக்க அலுவலர், நிறுவன ஆபத்து மேலாண்மைத் துணை அதிபர் மற்றும் நிறுவனச் சட்ட துறையிலிருந்து குறைந்தபட்சம் ஓர் உறுப்பினர் ஆகியோர் இடம் பெற்றிருப்பார்கள். இந்த நிர்வாகிகள் இந்தப் பிரச்சனை பற்றி விசாரணை தேவையா என்று தீர்மானிப்பார்கள், விசாரணை தேவை என்றால் அது நிறுவன அலுவலக நிலையில் கையாளப்படவேண்டுமா அல்லது குழு நிலையில் கையாளப்படவேண்டுமா என்று தீர்மானிப்பார்கள். விசாரணை தேவை என்றால், இதற்கென நியமிக்கப்பட்ட விசாரணை குழு அதனை நடத்தும். விசாரணையின் முடிவுகள் குட் பிசினஸ் லைன் நிர்வாகிகளுக்கு தெரிவிக்கப்படும், திருத்த மற்றும் ஒழுக்க நடவடிக்கைகள் பற்றிய சிபாரிசுகளும் வழங்கப்படும்.

சட்ட இணக்க நிபுணர்களின் ஆதரவு

நம்முடைய நடத்தை நெறிகள் மற்றும் அறநெறிகள் பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது அதுபற்றி உங்களுக்கு கூடுதல் விவரங்கள் தேவைப்பட்டால் நீங்கள் மேக்னாவின் சட்ட இணக்க நிபுணர்களை தொடர்பு கொள்ளலாம். இந்த நிபுணர்களின் பட்டியலை magna.com இணையத்தளத்தில் அல்லது MagNETல் தொழில் ஒழுக்கம் & சட்ட இணக்கம் பக்கத்தில் காணலாம்.

அருஞ்சொற்பட்டியல்

லஞ்சம்: தொழில் அல்லது மற்ற நன்மையை பெறுவதற்காக ஒருவருக்கு அவருடைய தனிப்பட்ட நன்மைக்கான மதிப்புமிக்க பொருள் எதையேனும் வழங்குதல் அல்லது வழங்குவதாக சொல்லுதல். இதில் கீழ்மட்ட அரசு அலுவலர்களுக்குத் தரப்படும் சிறிய தொகைகளும் (சில நேரங்களில் “வேலை நடப்பதற்காகத் தரப்படும் பணம்” அல்லது “வேலை இலகுவாகச் செல்வதற்காகத் தரப்படும் பணம்” என்று அழைக்கப்படுபவை) சேரும், இந்தத் தொகை, சாதாரணமாக ஒருவருக்கும் உரிமையுள்ள வழக்கமான சேவைகளைப் பெறுவதற்காக அவர்களுக்குத் தரப்படுகிறது.

இணக்கம்: சட்டம், இந்த நெறிமுறைகள் மற்றும் அனைத்து மேக்னா கொள்கைகளையும் எழுத்து மூலமாகவும் உணர்வு மூலமாகவும் பின்பற்றுதல்.

நல்ல நம்பிக்கை: நேர்மையான மற்றும் உளப்பூர்வமான நோக்கத்துடன்.

அரசாங்க அலுவலர்: ஓர் அரசாங்கம், ஒரு துறை அல்லது அமைப்பு, ஒரு பொதுச் சர்வதேச அமைப்பின் அலுவலர் அல்லது ஊழியர், அல்லது அரசாங்கம், துறை அல்லது பொதுச் சர்வதேச அமைப்பின் சார்பாக அதிகாரப்பூர்வமாக இயங்கக்கூடிய ஒரு நபர், அல்லது மேக்னாவின் செயல்முறைகளின்படி அரசாங்க அலுவலராகக் கருதப்படும் ஒரு நபர்.

உள் விவரம்: முதலீட்டாளர்கள் அல்லது பொதுமக்களுக்குத் தெரியாத ஒரு விவரம், இந்த விவரம் தெரியவந்தால் ஒரு நிறுவனம் அல்லது அதன் பங்கு அல்லது பத்திரத்தின் மதிப்பைபற்றிய அவர்களுடைய பார்வை குறிப்பிடத்தக்க அளவில் மாறக்கூடும். உதாரணமாக, ஒரு குறிப்பிடத்தக்க கையகப்படுத்துதல் அல்லது இணைப்பு, மூத்த மேலாளர்கள் குழுவில் மாற்றங்கள், குறிப்பிடத்தக்க வழக்கு அல்லது தொழிலாளர் பிரச்சனைகள்.

கையூட்டு: இதுவும் ஒருவகை லஞ்சம்தான். இதில், ஒரு தொழில் ஏற்பாட்டை நிகழ்த்திக்கொடுக்கிற ஒருவருக்கு, ஏற்கனவே செலுத்தப்பட்ட அல்லது இனி செலுத்தப்படவேண்டிய ஒரு தொகை தனிப்பட்டமுறையில் திரும்பத் தரப்படுகிறது.

ஆதரவு நாடுதல்: அரசாங்கத்தின் எந்த ஒரு நிலையிலும் உள்ள அரசாங்க அலுவலர்களுடைய (பொது அலுவலகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள், அரசாங்க அமைப்புகளின் ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் உள்பட) தீர்மானம் எடுத்தலை ஊக்குவித்தல், எதிர்த்தல் அல்லது மற்ற வகைகளில் பாதிக்கிற நோக்கத்துடன் அவர்களுடன் தொடர்பு கொள்ளுதல்.

உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள்: கணவன்/மனைவி, உடன் வசிப்பவர், குழந்தை, பெற்றோர், தாத்தா, பாட்டி, பேரன், பேத்திகள், உடன் பிறந்தோர், அத்தை, மாமா, மருமகன், மருமகள், மாமனார், மாமியார், ஒன்றுவிட்ட/தத்தெடுத்த/வளர்த்த உறவுகள், உங்கள் வீட்டில் வசிக்கிற, உங்களுடன் குடும்ப உறவுகொண்ட நபர்கள் மற்றும் வேலைக்கு வெளியே நீங்கள் பழகுகிற நண்பர்கள்.

மதிப்புமிக்க பொருள்: இது எந்த வடிவத்திலும் இருக்கலாம், உதாரணமாக பணம், பரிசுகள், சேவை நிறுவனங்களுக்கு நன்கொடைகள், அதீதமான பயணம் மற்றும் பொழுதுபொக்குச் செலவுகள், கல்விச் செலவுகள், வருங்காலத்தில் வேலை தருவதாகத் தரப்படும் வாக்குறுதிகள், ஒரு நிறுவனத்தின் பங்குகள் போன்றவை.

மூன்றாம் நபர்: மேக்னாவுக்கு வெளியே இயங்கும் ஒரு நபர், நிறுவனம் அல்லது தொழில் அமைப்பு.

அமலுக்கு வந்தத் தேதி: மே 1, 2016
கடைசியாக ஆய்வு செய்யப்பட்டது: மே 1, 2016
அடுத்த ஆய்வு தேதி: மே 1, 2019
வெளியிட்டவர்கள்: தொழில் ஒழுக்கம் மற்றும் சட்ட இணக்க பிரிவு
அங்கீகரித்தவர்கள்: இயக்குநர் குழு

magna.com

Driving Integrity
Know it.
Speak it.
Live it.